**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# O.S. No.398/2023

**20.03.2025**

## P.W.1- கவிதா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். கொடுத்த பணத்தை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நானும், எனது கணவரும் நகை அடகு கடை வைத்துள்ளோம். அதோடு சேர்ந்து வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறோமா என்றால் இல்லை. எனது கணவரும், பிரதிவாதியின் மருமகனும் ஒரே இடத்தில் வேலை பார்த்ததால் 2015லிருந்து 10 வருடங்களாக பழக்கம். பிரதிவாதியின் மகள் மற்றும் மருமகன் அவ்வப்போது எங்களிடம் பணம் வாங்குவார்கள். பிரதிவாதியின் மகள் எந்த தேதியில், எங்கு வைத்து, எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் அவ்வப்போது வாங்குவார்கள். பிரதிவாதியின் மகள், மருமகன் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டனர். பணத்தை திரும்ப கொடுத்ததால் நிரப்பப்படாத காசோலைகளை நான் திரும்ப கொடுத்துவிட்டேன். பிரதிவாதி எந்த தேதியில், எங்கு வைத்து, எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் 02.09.2021ம் தேதி எங்கள் வீட்டில் வைத்து பிரதிவாதி பணம் வாங்கினார். பிரதிவாதியுடன் வந்த வினோத் புரோநோட்டை பூர்த்தி செய்தார். அவர் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. அவர் புரோநோட்டை பால்பாயிண்ட் பேனா மூலம் எழுதினாரா அல்லது மை பேனாவினால் எழுதினாரா என்றால் பால்பாயிண்ட் பேனா மூலம் எழுதினார். பிரதிவாதி எந்த பேனாவில் கையெழுத்து செய்தார் என்றால் வினோத்குமாரின் பேனாவை வாங்கி கையெழுத்து போட்டார். வினோத்குமார் எழுதிய பேனாவும், பிரதிவாதி கையெழுத்து செய்த பேனாவும் ஒரே மையினால் ஆன பேனா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் வினோத்குமார் எழுதிய எழுத்தின் மையிற்கும், பிரதிவாதி கையெழுத்து

செய்த மையிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி கையெழுத்து செய்த மையிற்கும், வினோத்குமார் எழுதிய மையிற்கும் வேறுபாடு



இருக்கிறது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி புரோநோட்டில் சித்ரா என்பவர் சாட்சியாக கையெழுத்து செய்தார். மற்றொரு நாளில் செந்தில்குமார் கையெழுத்து செய்தார். மேற்படி செந்தில்குமார் கையெழுத்து செய்த மையும், பிரதிவாதி கையெழுத்து செய்த மையும் ஒரே மை கொண்ட பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் வாங்கிய சமயத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தை மட்டும் தான் கொடுத்தார். வேறு ஆவணங்களை கொடுக்கவில்லை. அப்போது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிரைய ஆவணத்தையும் புரோநோட்டு எழுதிய போது உடன் கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி 2013ம் வருடம் பணம் வாங்கினார் என்றால் சரியல்ல, அவரது மகள் மற்றும் மருமகன் வாங்கியது ஆகும். 23.10.2013ல் ரூ.1,50,000ம், 03.11.2013ல் ரூ.1,50,000ம் பிரதிவாதியின் மகள் கடன் பெற்றாரா என்றால் அவ்வப்போது பெற்று அவ்வப்போது திரும்ப பணத்தை கொடுத்து விடுவார்கள். என்னிடம், பிரதிவாதி 2017ல் ரூ.2 லட்சம் பெற்றார் என்றால் சரியல்ல. 2017ல் பெற்ற கடனுக்கு 2021ல் கடன் வாங்கியதாக புரோநோட் உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது மகளும் மொத்தமாக ரூ.5 லட்சம் திரும்பி கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக எனது கணவரிடம் தொலைபேசியில் பலமுறை பேசியுள்ளார்கள் என்றால் பேசியுள்ளார்கள், ஆனால் பணம் கொடுக்கவில்லை. அவ்வாறு பேசும்போது ரூ.40,000த்தை திரும்பி கொடுத்துவிட்டு ஆவணங்களை பெற்று கொள்ளுமாறு எனது கணவர் கூறினார் என்றால் அது பிரதிவாதியின் மகள் கடன் பெற்ற தொகைக்கு பேசினார். 10.11.2022ம் தேதி பிரதிவாதியும், அவரது மகளும் எனது அலுவலகத்திற்கு வந்தார்கள் என்றால் பிரதிவாதியின் மகள் தான் வந்தார். அவ்வாறு வரும் போது ரூ.37,000 கொடுத்துவிட்டு, மீத தொகை ரூ.3000த்தை எனது கணவருக்கு

குகூள் பே வில் கொடுத்தார்கள் என்றால் பிரதிவாதியின் மகள் கொடுத்த புரோநோட்டை திரும்ப பெற்று சென்றார். நான் இதற்கு முன்பு இரண்டு காசோலைகளை திரும்ப கொடுத்துவிட்டதாக சொல்லிவிட்டு தற்போது புரோநோட்டை திரும்ப கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால்

7

சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் பிரதிவாதி கடன் பெற்ற தொகையை திரும்ப செலுத்திய பிறகு ஆவணங்களை திரும்ப கொடுக்காமல் அதிக வட்டிக்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை பணம் கொடுப்பதற்கு காலதாமதம் ஆனால் பிரதிவாதியை அலைகழிக்க வேண்டும் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கடன் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் பிரதிவாதி என்னை பார்க்கவுமில்லை, கடன் வாங்கவுமில்லை என்றால் சரியல்ல. வெற்று புரோநோட்டை பொய்யாக நிரப்பிக்கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.